சிவமயம்

# வெளியீட்டுரை

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" — திருக்குறள்

என்பது சைவ சமயிகளின் உயர் லட்சியம். இவ் இலட்சியத்தை ஒவ்வொருவரும் அடைய வேண்டிய வழிமுறைகளைக் கூறி அவர்களை நன்னெறிப்படுத்துவதே சைவ ஆசார சீலர்களின் அளப்பெருங்கடன். அவ்வழியில் பலர் முன்னோடிகளாக விளங்கிய போதிலும் சைவப்பெரியார் திரு சு. சிவபாதசுந்தரம் அவர்கள் குறிப்பிடத் தக்கவர். அவர் சைவசமயத்தில் ஆசாரசீலர் மட்டுமன்றி, சாதாரண மனிதர் ஒவ்வொருவரும் அறிந்து வாழவேண்டுமென்று விரும்பினார். அதற்காக அவர் அமைத்த நூலே சைவசமய சாரம்.

சாரம் என்பது மேலான அம்சங்களை ஒன்று திரட்டித் தருவது. இங்கு சைவசமயத்தின் மேலான கருத்துக்கள் யாவும் இந்நூலில் ஒன்று திரட்டித் தரப்பட்டுள்ளன. இந்நூலில்

1. கடவுள் 2. ஆன்மாக்கள் 3. கடவுள்வழிபாடு
4. நல்வினை தீவினைகள் 5. சைவ வாழ்க்கை
6. சைவ ஒழுக்கங்கள் 7. சைவத்தின் மேன்மை

ஆகிய அம்சங்கள் அவை பற்றிய சுருக்கமான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

நிலையான பேரின்பப் பெருவாழ்வை அடைதற்கும், பற்றற்ற பரம் பொருளின் தன்மையை அறிந்து கொள்வதற்கும் ஏற்ற வகையில் சிறந்த ஒரு சித்தாந்த நூலாக சைவசமய சாரம் திகழ்கிறது.

நாவலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய ஆசார சீலரும், கல்வி மானும், சிறந்த சிந்தனையாளனும் ஆகிய சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரனார் அவர்களின் குருபூசைத் தினத்தன்று இந்நூல் வெளிவருவது சாலப் பொருத்தமானது. திருவருள் கூட்ட இந்நூல் இலவச வெளியீடாக வருவது கண்டு இறும்பூதெய்துகிறோம். சைவ உலகம் இதனைப் பெற்றுப் பயனடையுமாறு பிரார்த்திக்கிறோம்.

இந்நூலை வெளியிட உதவிய அச்சகத்தாருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்து இளைஞர் மன்றத்தினர்

விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

